1973 மார்ச் 6]

மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன? ஜவ்வாது மலையிலும், ஏலகிரி மலையிலும் இதற்கான முயற்சி செய்யப்பட வேண்டுமென்று மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அதன் மீது அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மலையில்தான் அன்னாசிப் பழம் பயிரிட முடியும் என்பது முன்னாலிருந்த கருத்து. இப்போது அதைச் சாதாரண சமவெளியிலும் தரையிலும் பயிரிட முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தொழிற் சாலைக்குப் பக்கத்தில் இருக்கும் விவசாயிகளை கூடியவரை அதைத் தயாரிக்கும்படி சொல்லியிருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: இந்தப் பழங்களைப் பதம் செய்வதற்கும் ரசம் எடுப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்களா? இந்தத் தொழிற்சாலைக்கு எவ்வளவு பழங்கள் தேவைப்படுகின்றன? எவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது? அப்படி எடுக்கப்பட்ட பழங்களில் இந்தக் காரியங்கள் நடைபெற்றால் அது வருஷத்தில் எவ்வளவு லாபம் சம்பாதிக்கும் தரும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எவ்வளவு பழங்கள் கிடைத்தாலும் பதனிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்போது அன்னாசிப் பழத்தை ஒரு கிலோ 85 பைசா என்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பழங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. கேரளத்திலிருந்து கொண்டுவர வேண்டியிருக்கிறது. கொண்டு வரும் செலவும் அதிகமாகிவிடுகிறது. ஆகவே, வேலூருக்கு அருகாமையில் இருக்கும் இடத்தில் அன்னாசிப் பழங்களைப் பயிரிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த அன்னாசிப் பழங்கள் பயிர் செய்ய எவ்வளவு ஏக்கர் நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன? எந்த இடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் சொன்னது பரிட்சார்த்தமாகப் பயிர் செய்து பார்த்ததில் வெற்றிகரமாக நடந்திருக்கிறது, நன்றாக வளர்ந்திருக்கிறது என்பதாகும். பழம் ஒன்று 1¼ கிலோ அளவுக்கு வேலூருக்குப் பக்கத்தில் இருக்கும் நிலங்களில் விளைவிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு பழம் பயிரிடுகின்றார்களோ அவ்வளவையும் வாங்கிக் கொள்ளுகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இதற்காக கூட்டுறவுப் பண்ணையாக அமைக்காமல்

விவசாயிகள் இதைப் பயிரிடுவதற்கு ஊக்கம் கொடுத்து வருகிறோம். சென்ற வருஷம் ஏறத்தாழ சுமார் 10 லட்சம் ரூபாய் அளவுக்கு அன்னாசிப் பழம் பயிரிடப்பட்டிருக்கிறது. அவ்வளவும் பதப்படுத்தி டின்களில் அடைக்கப்பட்டது. எவ்வளவு பழம் இருந்தாலும் அவ்வளவும் தேவையாக இருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: அன்னாசிப் பழம் போன்ற விலை உயர்ந்த பழங்களைப் பற்றிச் சொன்னார்கள். எங்கள் பகுதியில் தக்காளிப் பழம் அதிகமாக விளைகிறது. அதைப் பயன்படுத்தி பதனிட்டு ரசம் எடுத்தால் சாதாரண மக்கள் சத்துள்ள உணவாகச் சாப்பிட முடியும். இந்தத் திட்டத்தைப் பற்றி அரசு பரிசிலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஏற்கனவே சொன்னேன். தக்காளிப் பழத்தைப் பதனிடுகின்ற முயற்சியில் வெற்றி பெறவில்லை. காரணம், தமிழகத்தில், மற்றும் இந்தியாவில் உள்ள மக்கள் தக்காளிப் பழத்தைப் பச்சையாகச் சாப்பிடத்தான் விரும்புகிறார்கள். டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்பினாலும் நாம் இத்தாலி, கிரீக் நாடுகளோடு போட்டி போட முடியவில்லை. பைன் ஆப்பிள் ஒன்றுதான் பதனிடும் தொழிற்சாலையில் வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியும் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: இந்த பைன் ஆப்பிளுக்கு நல்ல கிராக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதை வளர்க்க விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்கின்ற முறையில் இன்செண்டிவ் ஸ்கீம் இருக்கிறதா? ஒரு ஏக்கரில் விவசாயி இதை விளைவித்தால் அவனுக்கு என்ன கிடைக்கும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விவசாயிகள் உற்பத்தி செய்கிற பழங்கள் பூராவையும் வாங்கிக் கொள்ளுவதே ஒரு இன்செண்டிவ்தான். விவசாயத் துறையில் ஒரு ஏக்கருக்கு இதை வளர்ப்பதன் மூலம் 5,000 ரூபாய் லாபம் கிடைக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே விவசாயிகள் ஊக்கமாகவே இருக்கிறார்கள். இதற்காக தனியாகப் பணம் கொடுக்கவோ, மானியம் கொடுக்கவோ தேவையில்லை.